செய்தி வெளியீடு எண்–891 நாள்–12.10.2010

**பால்வளத்துறை பணியாளர்களுக்கு பதவி உயர்வு ஆணைகள்**
**ஆவின் நிறுவனத்தில் புதிய பணி நியமன ஆணைகள்**
**துணை பதிவாளர்களுக்கு புதிய வாகனங்கள் வழங்கி**
**பண்டிகைக்கால சிறப்பு இனிப்புகளை**
**மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின்**
**அறிமுகப்படுத்தினார்**

* * * * * * * * *

**ஆவின் நிறுவனம் சார்பாக இன்று (12.10.2010) புனித ஜார்ஜ் கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் பால்வளத்துறையில் பணிபுரியும் 49 உதவியாளர்களுக்கு முதுநிலை ஆய்வாளர்களாக பதவி உயர்வு ஆணைகளையும், ஆவின் நிறுவனத்தில் 8 நபர்களுக்கு செயல் பணியாளர் ஆக பதவி உயர்வு ஆணைகளையும், 20 நபர்களுக்கு இளநிலை செயல்பணியாளர் பணி நியமன ஆணைகளையும் வழங்கினார். பால்வளத்துறையின் சரக துணைப்பதிவாளர் அலுவலகங்களின் பயன்பாட்டிற்கு 7 வாகனங்களையும் வழங்கினார். பண்டிகை காலத்தை முன்னிட்டு ஆவின் நிறுவனம் தயாரித்துள்ள 6 வகை சிறப்பு இனிப்புகளை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சிக்கு மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.உ.மதிவாணன் அவர்கள் முன்னிலை வகித்தார்.**

**பண்டிகைக்கால சிறப்பு இனிப்புகளான பிஸ்தா பர்பி, ப்ரூட் பர்பி, சாக்லேட் பர்பி, நட்ஸ் அல்வா, முந்திரி கேக், முந்திரி அல்வா போன்ற இனிப்பு வகைகள் 250 கிராம் அளவுகளில் ஆவின் பாலகங்கள் மற்றும் உரிமம் பெற்ற சில்லறை விற்பனைக் கடைகளிலும் கிடைக்கும்.**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரை, இணையத்தில் 86 பேருக்கும், மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 44 பேருக்கும், பால்வளத்துறையில் 11 பேருக்கும் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளும், பால்வளத்துறையில் 18 பேருக்கு புதியதாக பணி நியமன ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களில் பணிபுரியும் 190 பணியாளர்களுக்கும், பால்வளத்துறையில் பணிபுரியும் 48 பணியாளர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.**

**இந்த நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலாளர் திருமதி எம்.பி. நிர்மலா, பால்வளத்துறை ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர் திரு.அபூர்வ வர்மா மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.**

* * * * * * * * *

**வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**